இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

சட்டக்கற்கைகள் துறை

சட்ட பட்டமாணி நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் - 06

தொடர் மதிப்பீட்டு பரீட்சை 02 - 2022/2023

**LLU6717– சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

காலம்: ஒரு (01) மணித்தியாலம்

திகதி:- 03.12.2023 நேரம்: மு.ப. 09.30 - .ப 10.30

ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வழங்கப்படும்.

தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. கீழே தரப்பட்ட செய்தி அறிக்கையை வாசித்து தரப்பட்டுள்ள வினாவுக்கு விடை தருக.

<u>பலஸ்தீனியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களை விசாரிக்குமாறு போர்க்குற்ற நீதிமன்றத்தை வேண்டுகின்றனர்.</u>

ஹேக், நவம்பர் (10) ரொய்டர்ஸ் -

காஸா பகுதி மீது குண்டு வீச்சு மேற்கொண்டமை மற்றும் காஸாவை முற்றுகையிட்டமையை மூலமாக இனப்படுகொலை உட்பட போர்க்குற்றங்களை புரிந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இஸ்ரேலுக்கு எதிராக விசாரணையை ஆரம்பிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை தாம் வேண்டியதாக மூன்று பலஸ்தீனிய மனித உரிமைகள் குழுக்கள் கூறியது.

இஸ்ரேல் ஹேக்கில் அமைந்துள்ள நீதிமன்றத்தின் ஒரு உறுப்பினர் அல்ல என்பதுடன் அத்துடைய நியாயாதிக்கத்தை ஏற்றுகொள்ளவுமில்லை. அதன்மீது ஏற்கனவே சுமத்தப்பட்ட இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் வருந்தத்தக்கவை எனவும் அதன் நடவடிக்கைகள் காஸாவை ஆளுகின்ற ஹமாஸ் ஆயுத குழுக்களை குறிவைப்பதாகவன்றி குடிமக்களை நோக்கி அல்ல என குறிப்பிட்டது.

இது தொடர்பாக கருத்து ஒன்றை வேண்டிய போது இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார். " ஒக்டோபர் 07 தாக்குதலின் போது ஹமாஸ் புரிந்த (இஸ்ரேல் மீது) மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாகவும் அதன் பின்பு குடிமக்களை மனித கேடயங்களாக (காஸாவில்) பயன்படுத்தியமை உள்ளடங்கலான குற்றங்கள் தொடர்பில் இஸ்ரேல் சான்றுகளை சேகரித்து வருகிறது."

(அ) "சர்வதேச குற்றங்கள்" என்பதன் பொருளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) இஸ்ரேல் அரசாங்கம் மற்றும் ஹமாஸ்க்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்த முடியுமா? உமது விடை சர்வதேச சட்டத்தின் கீழான முற்சான்றுகளின் அடிப்படையில் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்

(15 புள்ளிகள்)

2. மனித உரிமைகளுக்கான அகில உலக பிரகடனத்தின் (UDHR) 75ஆவது ஆண்டு நிறைவு 2023 டிசம்பர் மாதம் வருகிறது. இந்த பிரகடனம் ஆரம்பத்தில் பிணிக்கப்படாத ஒரு ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் சில விமர்சகர்கள் UDHR இல் உள்ளடக்கப்பட்ட சில விதிமுறைகள் இன்று சர்வதேச சட்டத்தின் கீழ் பிணிக்கப்படும் விதிமுறைகளாக மாற்றமடைந்துள்ளன என வாதிடுகின்றனர்

பொருத்தமான உதாரணங்களை தந்து மேலே தரப்பட்ட கூற்றினை நுணித்தாராய்க.

**(20 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*